செ.வெ.எண்: 8 நாள் : 17.3.2023

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 16 பயனாளிகளுக்கு ரூ.33.60 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கு அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி ஆணையாளர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்**

**மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கி தகவல்....**

---

திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.3.2023) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் மேயர் அலுவலகத்தில் 16 பயனாளிகளுக்கு தாமாக வீடு கட்டிக் கொள்ளும் திட்டத்தின் கீழ் தலா ரூ.2.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.33.60 இலட்சம் மானியத்தில் வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கினார்கள்.

***மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் தெரிவித்ததாவது:***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வீடுகள் இல்லாத ஏழை, எளியோருக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்து, அதனை செயல்படுத்த உத்தரவிட்டார்கள்.

அதன்படி, திருப்பூர் மாநகராட்சியில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் அதன் வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடித்து 400 சதுர அடிக்கு மிகாமல் புதிதாக கான்கிரீட் தளம் போட்ட வீடு கட்டிக் கொள்ள பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் விதமாக தலா ரூ. 2.10 இலட்சம் வீதம் அவர்களது வங்கி கணக்கில் மூலம் வரவு வைக்கும் வகையில் மொத்தம் ரூ.33.60 இலட்சம் அதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

400 சதுர அடிக்கு மிகாமல் கட்டப்படும் இந்த வீட்டில் ஒரு பல்நோக்கு அறை, ஒரு படுக்கை அறை, சமையலறை, கழிவறை மற்றும் குளியலறை ஆகிய வசதிகளுடன் இந்த வீடு அமைக்கப்பட உள்ளது.

இவர்களுக்கு வழங்கப்படும் அரசு மானியமான ரூ.2.10 இலட்சம் நான்கு கட்டங்களாக வங்கியில் வரவு வைக்கப்படும். அதன்படி, கட்டிட அடித்தளம் அமைத்த பின் ரூ. 50,000, கட்டிட லிண்டல் அமைக்கப்பட்ட பின் ரூ. 50,000, கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட பின் ரூ. 50,000 மேலும், வீட்டின் முழு பணிகளும் முடிவடைந்த பின்னர் ரூ.60,000 வழங்கப்படும்.

எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இந்த திட்டத்தின் கீழ் பயனடையும் பயனாளிகள் முறையாக 12 மாதங்களுக்குள் கட்டிட வேலைகளை முடித்து சிறப்பாக வாழ வாழ்த்துகிறேன் என மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் தெரிவித்தார்.

---

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் மாநகராட்சி**

